# கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருடமுதலாம் அரையாண்டிற்கான சிறப்புக் கல்விமாணித் தேர்வு 2015/2016 (மார்ச் - ஏப்ரல் - 2019)

## EDS 2133 - கல்வியில் தத்துவ அடிப்படைகள் (Philosophical Foundations of Education)

**நேரம் - 03 மணித்தியாலங்கள்**

பகுதி I இல் இருந்து இரண்டு (02) வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று (03) வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக

---

## பகுதி I

1. அ. "வேதத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடைப்பட்டது தத்துவமாகும்" இதனை சுருக்கமாகக் கூறி கல்வியில் தத்துவம் பெறும் முக்கியத்துவத்தினையும் சுருக்கமாக விளக்குக?

(04 புள்ளிகள்)

ஆ. கல்வியில் சமயம்சார் தத்துவங்களை ஏன் முக்கியத்துவப்படுத்த வேண்டும் என்பதற்கு நான்கு (04) ஆதாரங்கள் காட்டுக?

(04 புள்ளிகள்)

இ. தத்துவங்கள் கல்வியியலாளருக்கு சிறந்த வழிகாட்டியாக அமைகின்றது என்பதால் நீர் விளங்கிக்கொள்வதை தற்காலத்துடன் ஒப்பீடு செய்வீரா? நான்கு (04) ஆதாரங்கள் முன்வைக்குக?

(06 புள்ளிகள்)

2. அ. "கல்வி பிள்ளையின் தேவைக்கேற்ப இயைபாக்கம் பெறவேண்டும்" எனும் இயற்கை வாதம் தரும் கல்விக்கருத்துக்கள் நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றது என்பதற்கு நான்கு எடுத்துக்காட்டுக்களை (04) முன்வைக்குக?

(04 புள்ளிகள்)

ஆ. பிளாட்டோ (Plato) கல்வி தொடர்பாகக் கூறியகருத்துக்களில் "மனிதன் வெவ்வேறு பணிகளைச் செய்ய வேண்டி இருப்பதனால் வெவ்வேறு வகையான கல்வி வழங்கப்பட வேண்டும்" எனும் கருத்தினை ஏற்றுக்கொள்வீரா? விடைக்கான ஆதாரங்கள் ஐந்தினை (05) வரிப்படுத்துக?

(05 புள்ளிகள்)

இ. காள்மாக்ஸ்சினதும், விவேகானந்தரினதும் கல்விக்கருத்துக்களில் பெண்
தொடர்பான ஒரே பார்வையின் இன்றைய நிலைப்பாடு பற்றி சுருக்கமாக விளக்குக?

(05 புள்ளி

3. அ. தொடரும் கல்வி தொடர்பான கொள்கைக்கு ஆதரவளித்தவர்களின் கருத்துக்கள் முன்வைத்து அக்கல்வி தொடர்பான நோக்கங்கள் மூன்றினை (03) வரிசைப்படுத்துக?

(06 புள்ளி

ஆ. முறை சார் கல்வி தொடர்பாகக் காணப்படும் பிரதான பிரச்சினைகளை இனங்க அவற்றிற்காக நீர் முன்வைக்கும் தீர்வாலோசனைகள் நான்கினை (04) முன்வைக்குக?

(04 புள்ளி

இ. ஆசிரியர்கள் பாடசாலை நிர்வாகத்துடன் மற்றும் சக ஊழியர்களுடனும் எத்தகு ஒழு விதிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான எடுத்துக்காட்டுக்கள் நான்கினை ( முன்வைக்குக?

(04 புள்ளிக

## பகுதி II

4. அ. இலங்கை தேசிய கல்வி ஆணைக் குழுவின் முதலாம் அறிக்கையில் (1 கூறப்பட்டுள்ள அடிப்படைத் தேர்ச்சிகளில் ஒவ்வொன்றும் இன்றைய வகுப்பறை மட்டங்க அடையப்பட்டுக்கொண்டு வருவதை இவ்விரு உதாரணங்கள் மூலம் விமர்சன ரீதி ஆராய்க?

(12 புள்ளிக

ஆ. தற்காலத்துக்குப் பொருத்தமான கல்வியைத் தீர்மானிப்பதில் அரசியலும், அரசாங்க காலங்காலமாக தமது ஆதிக்கத்தினைச் செலுத்திக்கொண்டுவருகின்றது. இது கல் கொள்கைகளில் ஏற்படுத்திய மாற்றங்களினை மையமாகக் கொண்டு ஆராய்க?

(12 புள்ளிக

5. அ. முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களிடத் ஆக்கபூர்வமான விழுமியம்சார் பண்புகளைக் கட்டியெழுப்புவதில் பாடசாலையொன் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதை நான்கு (04) உதாரணங்கள் முன்வைத் விளக்குக?

(12 புள்ளிக

ஆ. கல்வியில் சமூகமயமாக்கலை விளக்கி, கல்விகற்க ஆரம்பிக்கும் பிள்ளையொன் சமூகமயமாக்கலின் முதற்கட்டமாகக் காணப்படும் குடும்பத்தின் மூலம் கல்வி கற் தொடர்பான எவ்வாறான இசைவாக்கங்களினைப் பெறமுடியும் என்பதனை குடு அமைப்புக்களை மையமாகக்கொண்டு விளக்குக.?

(12 புள்ளிகள்

6. அ. "நவீன கல்வித் தேவைகளுக்கிணங்க யாரும் எப்போதும் கல்வி கற்கலாம் எனும் சூழ்நிலை இன்று மாற்றியமைக்கப்பட்டுள்ளது." இதன் அடிப்படையில் திறந்தகல்வி, தொலைக்கல்வி என்பன சமூகத்தில் எத்தகு மாற்றங்களைக் கொண்டுவந்துள்ளன என்பதனை விமர்சனரீதியாக ஆராய்க.? (12 புள்ளிகள்)

ஆ. "சமூகத்தின் தேவைகளை மையமாகக்கொண்டு கல்வி மாற்றியமைக்கப்பட வேண்டும்" அந்தவகையில் பாலியல்சார் கலாசார சீர்கேடுகளைக் குறைத்துச் சிறந்த மாணவர் சமுதாயத்தினை உருவாக்குவதற்கு எவ்வாறான கல்விக் கொள்கைகளை உருவாக்க முடியும் என்பதற்கான ஆலோசனைகளைக் கூறி விளக்குக. (12 புள்ளிகள்)

7. அ. இன்று ஆரம்பக்கல்வி தொடர்பாக அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அந்தவகையில் இலங்கைக் கல்விக் கொள்கைகள் ஆரம்பக்கல்வி தொடர்பாக முன்வைத்த கோட்பாடுகளைக் கூறி மேலதிகமாக எவற்றினை அதில் உள்நுழைக்க வேண்டும் என்பதனையும் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ. மூன்றாம் நிலைக் கல்வியில் இன்று ஏற்பட்ட பாரிய முன்னேற்றங்களின் விளைவுகள் இலங்கையிலும் தமது தாக்கத்தினைச் செலுத்தத் தவறிவிடவில்லை. இதனை நிருபிப்பதற்காக ஆதாரங்களைக்காட்டி இலங்கையின் உயர்கல்விப் போக்குகள் பற்றிய இன்றைய நிலையை மதிப்பீடு செய்க? (12 புள்ளிகள்)

மொத்தப் புள்ளிகள் - 100 (பகுதி I - 28 , பகுதி II – 72)